<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்</u>

<u>நாள். 11.09.2025</u>

<u>O.S. 301/2014</u>

<u>பி.வா.சா.1 -நயினார் ஆசாரி</u>

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் இரத்தினசாமி எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத் செல்லாது என பரிகாரம் கேட்டுள்ளார்கள். இரத்தினசாமி தேவரை எனக்கு தெரியும். இரத்தினசாமியின் பிள்ளைகளை தெரியுமா என்றால் கருப்பு சாமி ,நாகராஜன், ஆகியோரும் அவரது மனைவி கோமதியம்மாளையும் தெரியும். செல்லம் ஆசாரியை எனக்கு தெரியும். அவர் எனக்கு துாரத்து உறவினர். நான் வடிவீஸ்வரத்தில் இருந்து வருகிறேன். அவரும் 1990 வரை அங்கு இருந்தார். செல்லம் ஆசாரி தற்போது உயிருடன் இல்லை. செல்லம் ஆசாரியின் மனைவி ஜெயலெட்சுமி இறந்துவிட்டார். அவரது மகன் தங்கம் ஆசாரி , சுரேஸ் இருவரும் இறந்துவிட்டார்கள். அவரது பெண் பிள்ளைகள் ராதிகா, சுதா ஆவார்கள்.

2) தங்கம் ஆசாரி மனைவி மற்றும் பிள்ளைகள் விபரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் பழைய மற்றும் புதிய சர்வே எண் தெரியுமா என்றால் ஒரே சர்வே எண் Q 9/66 ஆகும். சொத்தின் விஸ்தீரணம் 80 சென்று ஆகும். அதன் நான்கு பக்க எல்கைகள் என்ன என்றால் கிழக்கு தெரு, மேற்கே பகவதி சுப்பிரமணியம் சொத்து, வடக்கே முன்பு செய்தீன் பீவி தற்போது கலா சொத்து தெற்கு பக்கம் தற்போது ஆறுமுகம் சொத்து. ஆகும். வடக்கு பக்கம் உள்ள சொத்து ஓட்டு வீடா என்றால் இல்லை. கான்கீரீட் கட்டிடம் தரை மற்றும் முதல் தளமும் உள்ளது.

3) இரத்தினசாமிதேவர் வழக்கு சொத்தில் உள்ள கட்டிடத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான்.14.8.1980 நாங்கள் கிரயம் வாங்கியபிறகு அவர் சென்றுவிட்டார். நாங்கள் என்றால் நானும் செல்லம் ஆசாரியும் ஆகும். செல்லம் ஆசாரிக்கு எந்த தேதியில் இரத்தினசாமிதேவர் கிரயம் எழுதினார் என்றால் 14.8.1980 ல் ஏற்படுத்தப்பட்டது.

4) இரத்தினசாமிதேவர் செல்லம் ஆசாரியிடம் பணம் வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் பணமே வாங்கவில்லை. பணம் கடன் வாங்கியிருந்தார் என்றாலும் அதற்கு வாக்கராலாக அனுபவத்தை செல்லம் ஆசாரிக்கு கொடுத்தார் என்றாலும் உண்மையில் பத்திரம் எதுவும் ஏற்படுத்திகொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. இரத்தினசாமிதேவருக்கு மனைவியும் 6 பிள்ளைகளும் இருக்கும்போது சொத்தை விலைக்கு விற்க அவசியம் என்ன என்றால் நாகர்கோவில் கூட்டுறவு வீட்டுவசதி

சங்கத்திதல் ரூபாய் 20 ஆயிரத்தை வீடு கட்ட கடன் வாங்கியிருந்தார் அதனை செலுத்தவில்லை என்பதால் சங்கம் அவரது சொத்தை ஏலத்தில் விற்க முயன்றது. சங்கமே ஏலத்தில் எடுத்து பிடித்துவிட்டது. அவரை காலி செய்ய முயன்றபோது எங்களிடம் அவர் கேட்டுக்கொண்டதால் நானும் செல்லம் ஆசாரியும் சங்கத்தில் இருந்த நிலுவை கடனை பாதிபாதியாக 14.8.1980 ல் சங்கத்தில் நேரடியாக செலுத்தி கடனை அடைத்து அன்றைய தினமே எங்கள் பெயருக்கு கிரயம் ஆவணம் செய்யப்பட்டது.

5) ஏலத்தில் விற்பனை செய்ய ஏல அறிவிப்பை நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. கிரயம் முடிப்பதற்கு மூன்று மாதங்கள் முன்பிலிருந்தே நாங்கள் அதனை பேசிக்கொண்டிருந்தோம். தாவா சொத்து ஏலத்திற்கு வருவதாக யார் என்னிடம் கூறினார் என்றால் இரத்தினசாமிதேவர் கூறினார். ஏலம் பிடித்தபிறகுதான் அதனை இரத்தினசாமிதேவர் என்னிடம் கூறினார்.

6) சங்கம் ஏலத்தில் சொத்தை பிடித்த பிறகு சங்கமே அதற்கு உரிமையாளர் என்றால் சரி. ஆனால் இரத்தினசாமி ஏலவிற்பனைக்கு எதிராக திருநெல்வேலியில் மேல் முறையீடு செய்தார்அது தள்ளுபடி செய்யப்பட்டது. பிறகு மதுரையில் கூட்டுறவு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார் அதுவுத் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த நேரத்தில் எங்களை அனுகினார். மேல்முறையீட்டு உத்தரவை இந்த வழக்கில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எனவே சொசைட்டி எடுத்த ஏலம் உறுதிசெய்யப்பட்டது என்றாலும் அது ரத்து செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

7) சொசையிட்டு பெயரில் ஏலம் எடுத்ததற்கான ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் காண்பிக்கவில்லை. அந்த சொத்தை சொசைட்டி எனக்கு எழுதிக்கொடுத்ததா என்றால் இல்லை. உரிமையில்லாத நபரிடம் இருந்து நானும் செல்லம் ஆசாரியும் கிரயம் ஆவணம் எழுதிவாங்கினோம் என்றால் சரியல்ல. அந்த சொத்தை விலைக்கு வாங்கும் முன்பு வருவாய் ஆவணங்களை நான் வாங்கி பார்த்தேன். அதனை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது போல் சொசைட்டியின் கடனை அடைத்தற்கு வழக்கு சொத்தை எனது பெயரிலோ செல்லம் ஆசாரி பெயரிலோ எழுதிக்கொடுத்ததா என்றால் இல்லை.

8) இரத்தினசாமிதேவரின் கடனை 3.7.2012 தேதி அன்று கோமதியம்மாள் அடைத்துள்ளார் என்றால் இந்த வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட ஆவணம் ஆகும். வாதி தாக்கல் செய்த ஆவணங்களை நான் பார்த்தேன். கோமதியம்மாள் கடனை செலுத்தியதாக தாக்கல் செய்யப்பட்ட ரசீதை( **வா.சா.ஆ.5**) நான் சொசைட்டியில் சென்று சரிபார்த்தேனா என்றால் ரசீதை என்னிடம் காண்பிக்கவில்லை.

9) வா.சா.ஆ.5 ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டபோது அது ஜோடிக்கப்பட்ட ஆவணம்

என கூறுகிறார். 2014 ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது வா.சா.ஆ.5 ஆவணத்தை பற்றி பத்தி 3 ல் சொல்லப்பட்டவிபரம் எனக்கு ஞாபகம் இல்லை.

10) வா.சா.ஆ. 5 ஆவணத்தில் 1ம் வாதி செலுத்தப்பட்ட கடனுக்காக விபரத்தை நான் எனது எதிர்வழக்குரையில் மறுக்கவில்லை என்றால் எனக்கு அந்த விபரமே தெரியாது. தற்போது தான் அதைப்பற்றி கூறுகிறார்கள். நான் விலைக்கு வாங்கிய சொத்தின் வில்லங்க சான்றிதழை 1980 லிருந்து 2014 வரை எடுத்து பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

11) 14.8.1980 ல் கிரயம் செய்த இரண்டு பத்திரத்தில் எது முதலில் பதிவு செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. என்னடைய பெயரில் 1.25 சென்று எழுதப்பட்டது. பி.வா.சா.ஆ.1 ஆவணம் உண்மையில் இரத்தினசாமிதேவர் எழுதிதந்த ஆவணம் இல்லை என்றாலும் அந்த ஆவணத்தை நான் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 1 எழுதப்பட்டது 12.8.1980 ஆகும். அந்த அவணத்தை தயார் செய்தது நான் . அந்த ஆவணத்தில்உள்ள இரத்தினசாமிதேவரின் கையொப்பம் அவருடையது இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ல் ஒவ்வொரு தாளிலும் பின்பக்கம் எழுதிக்கொடுத்தவரின் பெருவிரல் ரேகை இல்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

12) பி.வா.சா.ஆ.1 ன் தன்மை பிராகரம் அந்த சொத்தின் உரிமையாளர் சொசைட்டி என்றால் சரிதான். பி-வா.சா.ஆ- 1ல் ஆவணத்தை எழுதுவதற்கு சொசைட்டியில் அனுமதி வாங்கினோமா என்றால் வாய்மொழி மூலம் அனுமதி தந்தார்கள். எழுத்துமூலம் வாங்கவில்லை. சொத்தின் உரிமையில்லாத நபரிடம் இருந்து கிரயம் வாங்கியதால் பி.வா.சா.ஆ. 1 செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. சொசைட்டி சொத்தை கையகப்படுத்தவில்லை.

13) பி.வா.சா.ஆ.1 முதல் பக்கம் பின்புறத்தை தவிர 1 முதல் 9 பக்கத்தில் இரத்தினசாமிதேவரின் கையொப்பம்மாக சொல்லப்படுவதும் சாட்சியின் கையொப்பமும் நீல நிறத்தில் உள்ளது என்றால் சரி. 1 வது சாட்சியின் கையொப்பத்தை தொடர்ந்து கருப்பு மையால் செகரட்டரி கோப்ரேட்டிவ் சொசைட்டி என எழுதப்பட்டது என்றால் சரிதான். சொசைட்டியின் முத்திரை அதில் இல்லை. அதேபோல் முதல் பக்கம் பின்பக்கத்தில் இரத்தினசாமிதேவர் கையொப்பம் கருப்பு மையால் உள்ளது என்றால் சரி. 12 ம் தேதி எழுதிய பத்திரத்தை 14 ம் தேதி பதிவு செய்ய காரணம் என்ன என்றால் 12 ம் தேதி மாலையில் அது எழுதப்பட்டது. 14 ம் தேதி பணத்தை செலுத்திவிட்டு ஆவணத்தை பதிவு செய்தோம்.

14) பி.வா.சா.ஆ.1 ல் 1000 ரூபாய் பத்திரம் 13 ம் தேதி வாங்கப்பட்டது என்றால் சரி. அதில் பத்திரம் எழுதியவரிடம் ஒப்படைத்துவிட்டோம் அவரே வாங்கி தயார் செய்தார். அந்த ஆவணத்தில்இரத்தினசாதி தேவரின் மனைவியிடமோ வாரிசிடமோ கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரி. பி.வா.சா.ஆ.2 ஆவணம் என்னிடம் எவ்வாறு வந்தது என்றால்

அவருடைய பாகத்தை எனக்கு கிரயம் செய்து தந்தார் அதனால் என்னிடம் வந்தது. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை எழுதி தயார் செய்த ஏற்பாட்டை நான் செய்தேன் என்றால் இல்லை அதை செய்தது சுந்தரலிங்கம் பிள்ளை மகன் சங்கரலிங்கம். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் விபரங்கள் இரத்தினசாமிதேவர் சொன்னார். பி.வா.சா.ஆ.2 முதல் பக்கம் பின்புறத்தை தவிர 1முதல் 9 பக்கத்தில் இரத்தினசாமிதேவரின் கையொப்பம்மாக சொல்லப்படுவதும் சாட்சியின் கையொப்பமும் நீல நிறத்தில் உள்ளது என்றால் சரி. 1 வது சாட்சியின் கையொப்பத்தை தொடர்ந்து கருப்பு மையால் செகரட்டரி கோப்ரேட்டிவ் சொசைட்டி என எழுதப்பட்டது என்றால் சரிதான். சொசைட்டியின் முத்திரை அதில் இல்லை. அதேபோல் முதல் பக்கம் பின்பக்கத்தில் இரத்தினசாமிதேவர் கையொப்பம் கருப்பு மையால் உள்ளது என்றால் சரி. 12 ம் தேதி எழுதிய பத்திரத்தை 14 ம் தேதி பதிவு செய்ய காரணம் என்ன என்றால் 12 ம் தேதி மாலையில் அது எழுதப்பட்டது. 14 ம் தேதி பணத்தை செலுத்திவிட்டு ஆவணத்தை பதிவு செய்தோம். சட்டப்படி செல்லுப்படி ஆகாத ஆவணம் என்றால் சரியல்ல.

15) சொசைட்டி பெயரில் ஏலம் எடுத்ததை ரத்து செய்யத ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் காண்பிக்கப்படவில்லை. சொசைட்டி வாக்கரலாக கிரயத்திற்கு அனுமதி கொடுத்த விபரத்தை பி.வா.சா.ஆ.1, 2 சொல்லப்படவில்லை என்றால் சரி. பி.வா.சா.ஆ. 3 ஆவணத்தில் பணம் செலுத்தியது இரத்தினசாமிதேவர் என்றால் சரியல்ல. நான் ஆகும். பி.வா.சா.ஆ.1,2 பி.வா.சா.ஆ.3 ற்கு முன்பாகவே தயார் செய்த ஆவணம் என்றால் சரி.

16) பி.வா.சா.ஆ.1 ல் பக்கம் எண் 4 ல் கிரயம் தொகை 25 ஆயிரத்தை பெற்று கொண்டு கிரயம் செய்யப்பட்டது என்று சொல்லப்பட்டது என்றால் நாங்கள் ரொக்கமாக கொடுக்கவில்லை வங்கியில் தான் செலுத்தியுள்ளோம். பத்திரத்தில் 4 ம் பக்க த்தில் சொல்லப்பட்டட விபரம் தவறு என்றால் சரியல்ல.

17) பி.வா.சா.ஆ. 2 ல் 22250 ஐ என்னிடம் பெற்றுகொண்டு இரத்தினசாமிதேவர் கடனிற்கு செலுதியதாக சொல்லப்பட்டது என்றால் சரி. செல்லம் ஆசாரியும் நானும் சேர்ந்து 47500 தொகையை கடன் அடைப்பதற்காக இரத்தினசாமிதேவரிடம் கொடுத்ததாக பத்திரதத்தில் சொல்லபட்டுள்ளது என்றால் சரி. நாங்கள் 14 ம் தேதிதான் பணத்தை கொடுத்தோம். பி.வா.சா.ஆ. 3 ல் 18000 கடன் செலுத்தியதற்கு மட்டும் ரசீது உள்ளது என்றால்சரி. செல்லம் ஆசாரி செலுத்திய ரசீது தொலைந்து விட்டது. எங்கள் இருவரையும் கடனை செலுத்தசொல்லி பி.வா.சா.ஆ.2 சொல்லியுள்ளது என்றால் சரி.

18) பி.வா.சா.ஆ. 2 செல்லுபடியாகதா ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்பதால் அதன் அடிப்படையில் எழுதப்பட்டட பி.வா.சா.ஆ. 4 செல்லுபடியாகத ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 5 பட்டா புத்தகத்தில் அனைத்து விபரமும் அடித்தல் திருத்தல் உள்ளது

என்றால் சரி.

19) பி.வா.சா.ஆ. 6 ஆவணமும் அடித்தல் திருத்தம் உள்ளது என்றால் சரி. பி.வா.சா.ஆ. 5 மற்றும் பி.வா.சா.ஆ. 6 2012 ல் தான் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. 17.4.1994 என்று முத்திரை குத்தப்பட்டுள்ளது. 1994 ல் எனது நண்பருக்கு பிணை கொடுப்பதற்காக நான் ஜாமீன் கொடுத்தேன். பட்டாவின் தேதி என்ன என்றால் தெரியவில்லை.

20) பி.வா.சா.ஆ. 9 ஆவணம் இரத்தினசாமிதேவரின் கடனை எங்கள் பெயரில் எழுதிதரவேண்டி நாங்கள் சொசைட்டிக்கு கேட்டபோது அவர்கள் கொடுத்த பதில் ஆகும். நானும் செல்லம் ஆசாரியும் சேர்ந்து எழுதினோமா என்றால் இல்லை தனிதனியே எழுதினோம்.

21) இரத்தினசாமி யிடம் இருந்து நாங்கள் கிரயம் பெற்றதால் அவர் சொசைட்டி பெயரில் எழுதிக்கொடுத்த அடமானத்தை எங்கள் பெயரில் திருப்பி எழுதிக்கொடுக்க கடிதம் அனுப்பினோம். பி.வா.சா.ஆ. 9 ல் சொசைட்டி எங்கள் கிரய ஆவணத்தை சொசைட்டியிடம் ஒப்படைக்க கேட்டார்கள் நாங்கள் நகலை கொடுத்து அசலை ஒப்படைப்பு செய்துவிட்டு வந்தோம். அதற்கு ஆவணம் எதுவும் உள்ளது என்றால் இல்லை. உண்மையில் நாங்கள் ஒப்படைப்பு செய்வில்லை என்றாலும் வழக்கிற்காக சொல்கிறோம் என்றாலும் சரியல்ல. விடுதலைப்பத்திரம் எங்கள் பெயரில் எழுதிக்கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

22) பி.வா.சா.ஆ. 3 ல் கடனை அடைக்கவில்லை என்பதால் எங்கள் பெயரில் விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. முறைப்படி கடனை வா.சாஆ. 5 ஆவணத்தின் மூலம் கோமதியம்மாள் அடைத்து அவரது பெயரில் விடுதலைப்பத்திரம் எழுதியுள்ளார் என்றால் சரியல்ல.

23) பி.வா.சா.ஆ. 10, 11 ,12 வரிசை ஆவணங்கள் சட்டப்படி செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 13 ல் மனுதாரர் தவறுகைக்காக தள்ளுபடி செய்ப்பட்ட உத்தரவு என்றாலும் உரிய விசாரணை இன்றி பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்றால் சரிதான்.

24) பி.வா.சா.ஆ. 14 முதல் 19 வரையிலான ஆவணம் சட்டப்படி செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. உண்மையில் இரத்தினசாமிதேவருக்கு மட்டுமே சொத்து உரிமை என்றாலும் வாதிகளுக்கு சட்டப்படி பாகம் கிடைக்கத்தக்கது என்றாலும் வாதிகள் கோரிய பரிகாரம் செலவு தொகையுடன் கிடைக்கத்தக்கது என்றாலும் சரியல்ல.